2015 செப்டம்பர் 28]

5. கவன ஈர்ப்பு

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் வசதிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சு. குணசேகரன் மற்றும் திரு. பி.வி. கதிரவன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் உறவினர்களுக்கும் தங்கும் வசதிகள் செய்து தர வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு தொடர்பான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

மருத்துவக் கல்வி இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு வரும் உள்நோயாளிகளுக்கு வேண்டிய சிகிச்சை அம்மருத்துவமனைகளில் வழங்கப்பட்டு வருகின்றது. உள்நோயாளிகளுடன் வரும் உறவினர்களுக்காக அரசு மருத்துவமனைகளில் காத்திருக்கும் கூடாரம் (Waiting shed) அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இரவு நேர இருப்பிட வசதிகளை, நோயாளிகளின் உறவினர்களுக்கு மேம்படுத்தி வழங்கும் நோக்கத்துடன் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2015 செப்டம்பர் 28

வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனை, அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு ஸ்டான்லி மருத்துவமனைகளில் சென்னை மாநகராட்சியுடன் இணைந்து இதனைச் செயல்படுத்தி, மாநிலத்தில் உள்ள இதர மருத்துவமனைகளுக்கும் படிப்படியாக, இருப்பிட வசதிகள் செய்து தரப்படும்.

தமிழகத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளும் இரண்டாம் நிலை மருத்துவமனைகளாகும். இங்கு சிகிச்சைக்கு வரும் வெளிநோயாளிகள் உடனுக்குடன் சிகிச்சை பெற்று சென்றுவிடுகிறார்கள். மருத்துவமனையிலேயே தங்கி சிகிச்சை பெறும் உள்நோயாளிகளின் உறவினர்கள் தங்குவதற்கான காத்திருக்கும் கூடார வசதிகள் உள்ளன. இந்தக் கூடாரத்தில் உள்ள வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அவைமுன் வைத்திருக்கின்ற விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். பொதுவாக, இன்றைக்குத் தமிழ்நாட்டில் 21 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் இருக்கின்றன. அவற்றில் கிட்டத்தட்ட 19,677 படுக்கை வசதிகள் உள்ளன. அதைப்போல, 25 மாவட்டத் தலைமை அரசு மருத்துவமனைகள் இருக்கின்றன. அவற்றில் 38,230 படுக்கை வசதிகள் உள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் 7,400 படுக்கை வசதிகள் உள்ளன. ஆகமொத்தம், 65,307 படுக்கை வசதிகளைக் கொண்ட ஒரு மிகப் பெரிய மருத்துவக் கட்டமைப்பாக தமிழ்நாட்டில் மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் சுமார் 250–க்கும் மேற்பட்ட படுக்கை வசதிகள் உள்ள நிலையில், அங்கு உள்நோயாளிகளாகச் சேர்க்கப்படக்கூடியவர்கள், I.C.U. போன்ற தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்பட்டும், குழந்தை மருத்துவம், முட வைத்தியம் என்று பல்வேறு வகையான அறுவை சிகிச்சைகள். . .

2015 செப்டம்பர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன், ஒரு கேள்வியைக் கேளுங்கள். விவாதம் இல்லை, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சு. குணசேகரன்: சொல்லிவிடுகிறேன், அதனுடைய அவசியத்தை உணர்த்த வேண்டுமல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்பு இல்லை, உங்களுக்கு நன்றாகத் தெரியும். கேள்விதான் கேட்க வேண்டும். நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சு. குணசேகரன்: அந்தப் பிரிவுகளில் உள்நோயாளிகளாகச் சிகிச்சை பெறக்கூடியவர்கள், அங்கு குறைந்தபட்சம் 10 தினங்களுக்கு மேலாகத் தங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; பல்வேறு நோயாளிகள் குறைந்தபட்சம் 3 நாட்கள், 4 நாட்கள் தங்கி சிகிச்சை பெற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அப்படி சிகிச்சை பெறக்கூடியவர்களுக்கு உதவியாக ஒருவர், இருவர் என்ற அடிப்படையில் உதவியாளர்கள், உறவினர்கள் தங்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து வகையான மருத்துவமனைகளிலும் உதவியாளர்களாக வரக்கூடியவர்களுக்கு, அவர்கள் தங்குவதற்கான அல்லது இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்கான பல்வேறுவிதமான அம்சங்களோடு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாத காரணத்தால், உள்நோயாளிகள் பயன்படுத்தக்கூடிய அந்தக் கழிப்பறைகளையே அவர்களும் பயன்படுத்துவதால், பல்வேறுவிதமான சிரமங்கள், பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவேதான், இன்றைக்கு அந்த உள்நோயாளிகளுக்கு உதவியாளர்களாக இருக்கக்கூடியவர்கள், அங்கே தங்கி உதவி செய்யும் வகையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் குணசேகரன், நீங்கள் ஆரம்பித்தீர்களென்றால் முடிக்கவே மாட்டீர்களா? இது கவன ஈர்ப்பு. விவாதம் மாதிரி பேசிக்கொண்டிருந்தால் எப்படி? இப்பொழுது மணி 12–32 ஆகிறதல்லவா? நான் அடுத்த அலுவலுக்குச் செல்ல வேண்டுமல்லவா? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: எனவே, அந்த அடிப்படையில் உதவியாளர்கள் தங்கி, நோயாளிகளுக்கு உதவுவதற்கு வசதியாக, ஆண்களும், பெண்களும் தங்குவதற்கு வசதியான கூடாரங்களை அமைக்க வேண்டும். அதில் பொருட்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கான cloak room வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். அங்கே கழிப்பிட வசதிகள், குடிநீர் வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் மேம்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அங்கு வரக்கூடிய மக்கள் சாதாரண ஏழை, எளிய மக்களாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கான உணவுத் தேவை என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே, அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அம்மா உணவகங்களைத் தொடங்கி நடத்துவதென்பது உதவியாளர்களுக்குப் பேருதவியாக இருக்கும். எனவே, அதை விரைந்து செயலாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் தொடர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களுடன் நிச்சயமாக ஓர் உதவியாளரோ அல்லது உறவினரோ இருந்துதான் ஆகவேண்டும். அது தவிர்க்க முடியாதது. ஏற்கெனவே அவர்கள் தங்குவதற்கு, காத்திருப்போர் கூடாரம் அமைக்கப்பட்டிருக்கிறது. நான் அதை மறுக்கவில்லை. ஆனால், அவர்கள் இரவில் அங்கு தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த அடிப்படையில், மருத்துவமனையில் உள்நோயாளிகளாக இருப்பவர்களுக்கு உதவிகரமாக இருப்பவர்கள் தங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியிலே

இன்றைக்குத் திட்டங்களே திகைத்துப் போகக்கூடிய அளவுக்குத் திட்டங்களைக் கொடுக்கக்கூடிய ஆட்சியாக, (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாத் துறைகளிலும், எல்லா வசதிகளையும் ஏற்படுத்துகின்ற ஆட்சியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்டதை மட்டுமல்ல, கேட்காததையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அரசு மருத்துவமனையிலே அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம் போன்ற அற்புதமான திட்டங்களை வழங்கி, அரசு மருத்துவமனையை பரிசு மருத்துவமனையாக மாற்றியிருக்கக்கூடிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–35

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே கோரிக்கைகளை தெரிவித்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு ஆறு இலட்சம் புற நோயாளிகள் அரசு மருத்துவமனைகளுக்கு வருகிறார்கள்; 82,000 உள்நோயாளிகள் நம்முடைய அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் குணமாக்கப்பட்டு, நோய் நீங்கி மகிழ்ச்சியோடு செல்லும் அளவுக்கு நிருவாகம் அவர்களை மிகச் சிறப்பாகக் கவனித்துக்கொள்கிறது. அவர்களுக்குரிய அடிப்படை வசதிகள் மருத்துவமனைகளிலே தேவையென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். தமிழகத்திலே மருத்துவமனைகளில் தங்கி, சிகிச்சை பெற்றுவரும் உள் நோயாளிகளின் உறவினர்கள் தங்குவதற்காகக் காத்திருக்கும் கூடாரங்கள் (Waiting Sheds) ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த Waiting Shed-லே Fan, Light, இருக்கை வசதிகள் உள்ளிட்ட வசதிகளெல்லாம் ஏற்படுத்தப்பட்டு, அவர்கள் தங்குவதற்கு போதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். மேலும், அந்தக் கூடாரத்திலே உள்ள வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாமல், கடந்த முறை விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டு, R.O. Water என்று சொல்லக்கூடிய, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் மாண்புமிகு அம்மா

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2015 செப்டம்பர் 28

அவர்களின் அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலே, நம்முடைய சென்னையிலே இருக்கக்கூடிய M.M.C. மருத்துவமனை, எழும்பூரில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை போன்ற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலே, வெளியூர்களிலிருந்து வரும் நோயாளிகள் தங்கி, தொடர்ந்து ஒரு மாத அளவிற்குச் சிகிச்சை பெறவேண்டிய நிலை இருக்கிறது. நான் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் பேசுகின்றபோது, மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகள் இல்லையென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்த வார்த்தை மட்டும் தவறான வார்த்தை. மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை சரியானது. அங்கே அடிப்படை வசதிகளே இல்லையென்ற ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்த ஒரு வார்த்தையை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், எல்லா மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலே நோயாளிகளின் உறவினர்கள் தங்குவதற்கு இட வசதிகள் இருக்கின்றன. அவர்களுக்குக் கழிப்பறை வசதிகள் இருக்கின்றன. அவை முறையாகப் பராமரிக்கப்படுகின்றன. இருப்பினும், இன்றைக்கு நாள் ஒன்றுக்கு 82,000 உள் நோயாளிகள் என்ற வகையிலே, உள் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எல்லோரும் அரசு மருத்துவமனையை ஒரு நம்பிக்கையோடு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிலே தேடி வரக்கூடிய சூழல் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்லப்போனால், தனியார் மருத்துவமனைகளிலே கடைசி நேரத்திலே தவிக்க விடப்படும் நோயாளிகளைக்கூட, அரவணைத்துச் செல்லக்கூடிய மருத்துவமனைகளாக அரசு மருத்துவமனைகள் இருக்கின்றன. ஆகையினாலே, இன்றைக்கு மக்கள் அரசு மருத்துவமனைகளை நாடி, தேடி வருகின்ற நிலையில், நோயாளிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக

2015 செப்டம்பர் 28] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

இருக்கிறது. அதை மனதிலே வைத்துக்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, உள்ளாட்சித் துறையின் மூலமாக இன்றைக்கு முதன்முதலாக அந்த Waiting sheds-ஐ முழுநேரக் காப்பகங்களாக மாற்றிட நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில், மருத்துவமனைகளுக்கு அதிக அளவிலே வரக்கூடிய ஏழையெளிய மக்கள், நோயாளிகள், நோயாளிகளின் உறவினர்கள் மற்றும் உதவியாளர்கள் இவர்களெல்லாம் தங்கக்கூடிய அளவிற்கு, இன்றைக்கு முதற்கட்டமாக மொத்தம் 12 காப்பகங்களைக் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவு செய்து, அதற்கான டெண்டர் கோரப்பட்டு, அந்தப் பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. அதிலே R.S.R.M. மருத்துவமனையில் 2 காப்பகங்கள், ஸ்டான்லி மருத்துவமனையில் 2 காப்பகங்கள், I.C.H. மருத்துவமனையில் 2 காப்பகங்கள், K.M.C. மருத்துவமனையில் 2 காப்பகங்கள், சென்னை பொது மருத்துவமனையில் 2 காப்பகங்கள், I.O.G. மருத்துவமனையில் 2 காப்பகங்கள் என முதற்கட்டமாக 12 காப்பகங்கள் நோயாளிகளின் உதவியாளர்கள் இரவு நேரத்திலே தங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, ஒவ்வொரு காப்பகத்திற்கும் 45 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, கட்டப்பட்டு வருகின்றன. மேலும், அவற்றை போதிய கழிப்பறை வசதிகளுடன் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல; எல்லா மருத்துவமனைகளிலும் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளை படிப்படியாக ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் பணிவோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; உணவு வசதி பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, அரசு மருத்துவமனைகளில் வரக்கூடிய, அந்த ஏழையெளிய நோயாளிகளுக்கு, நோயாளிகளின் உறவினர்களுக்கு, அவர்களின் உதவியாளர்களுக்கு அவர்கள் அந்த மருத்துவமனை வளாகத்தைத் தாண்டி உணவுக்காக வெளியிலே செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாத நிலையை உருவாக்கி, ஓர் அற்புதமான வரப்பிரசாதமாக, இன்றைக்கு அம்மா உணவகங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2015 செப்டம்பர் 28

சென்னையிலே மட்டும் 7 அம்மா உணவகங்கள். அதேபோல இதர மாவட்டங்களில் 23 அம்மா உணவகங்கள் என 30 அம்மா உணவகங்கள் அமைக்கப்பட்டு, மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் எல்லோருமே இன்றைக்குப் பயன்படுத்துகின்றார்கள். அந்த வகையிலே, ஒரு வரப்பிரசாதமாக அம்மா உணவகங்களை வழங்கி, இன்றைக்கு அரசு மருத்துவமனைகளில் எல்லா வசதிகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்; கட்டமைப்பு வசதிகளைக் கொடுத்திருக்கிறார்கள்; மருத்துவ வசதிகளைக் கொடுத்திருக்கிறார்கள்; கழிவறை வசதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த கழிவறைகளைப் பராமரிக்க, இன்றைக்கு out-sourcing முறையில், ஏறத்தாழ 5,000-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, புறத் தூய்மை, hospitals, clean and green campus என்று சொல்லக்கூடிய அந்த முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு யோசனையாகக் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த இரவு நேரக் காப்பகங்களை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு யோசித்து, ஏற்கெனவே திட்டமிட்டு, மதிப்பீடு செய்து, அவற்றிற்கான டெண்டர் விடப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் பாராட்டிக் கொண்டு இருக்கக்கூடிய அளவிற்குத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள், இந்தத் துறையை வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

6. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.